## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2019 ஆம் ஆண்டு மே திங்கள் 22-ம் நாள் சாட்சியாகிய விஜயா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி இளநிலை உதவியாளர் திருமதி. சரஸ்வதி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | விஜயா | வயது 48 |
| த/பெ. (அ) க/பெ. | ரமணா | இனம் |
| கிராமம் | குன்றத்தூர் | தொழில் டிஎல் எப் வேலை செய்கிறேன். |
| சமயம் | | தாலுக்கா |

C.C.276 /2017

<u>முதல் விசாரணை</u> 22.05.2019 அ.சா. 2 விஜயா

நான் குன்றத்தூரில் வசிக்கிறேன். நான் டிஎல் எப் ல் வேலை செய்கிறேன். அசா 1 மகள். சாட்சி ஏழுமலை எனது மருமகன். எதிரியையும் அவரது குடும்பத்தையும் எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு 5 ஆம் மாதம் தேதி நினைவில் இல்லை. காலை வேலைக்கு சென்று விட்டேன். நான் வேலைக்கு சென்றவுடன் எனது மருமகனும் வேலைக்கு சென்றுவிட்டார். எதிரி அன்றைய தினம் காலையிலேயே ஒரு முறை வீட்டிற்கு வந்து பார்த்திருக்கிறார். வீட்டில் ஆட்கள் இருந்ததால் அவர் திரும்பி சென்று விட்டார். மீண்டும் பகல் 12 மணிக்கு மேல் எனது மகள் வீட்டில் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவர் வந்து கதவை தட்டியுள்ளார். பின் சாப்பிட ஏதாவது இருக்குமா என்று கேட்டுள்ளார். எனது மகள் காபி கொடுத்துள்ளார். அவர் வாசலில் அமர்ந்து விட்டு எனது மகள்வாசலுக்குள்ளே சேர் போட்டு அமர்ந்து பேச்சு கொடுத்துள்ளார். பின்னர் எதிரி தண்ணீர் கேட்டவுடன் எனது மகள் தண்ணீரை எடுக்க சென்றபோது கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துணியை எடுத்து எனது மகளின் கழுத்தில் போட்டு இறுக்கி உள்ளார். அவர் மறைத்து வைத்திருந்த பூச்சிக்கொல்லி மருந்து HIT ஐ எடுத்து அவர் மூக்கிலும் வாயிலும் அடித்தார். அவர் மீது அமர்ந்து கொண்டு மாறிமாறி அடித்துள்ளார். மேலும் மயக்க நிலையிலேயே எனது மகள் எதிரியின் கையை கடித்துள்ளார். எதிரி தப்பித்து சென்றவுடன்தான் எனது மகளின் தங்க தாலி சரடு காணவில்லை என தெரிந்துள்ளது. பிறகு எனது மருமகன் விவரம் தெரிந்து எனது மகளை மாதா மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்துள்ளார். நான் மாதா மருத்துவமனைக்கு போய் சென்று பார்த்தேன். விவரங்கள் அனைத்தும்

கேள்விப்பட்டுத்தான் தெரிந்து கொண்டேன். போலிசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் மாலை 4 மணிக்கு வீட்டிற்கு வந்தவுடன்தான் வழக்கு விவரங்களை தெரிந்து கொண்டேன். மற்றபடி தொலைபேசி மூலம் யாரும் சொல்லவில்லையா என்றால் இல்லை. அன்றைய தினமே மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள். எனது மருமகன் ரவி என்று எதிரியின் பெயரை கூறியதன் பேரிலேயே எனக்கு விவரம் தெரியும் என்றால் ஆமாம். எதிரியை 10 வருட காலமாக தெரியும். எதிரி சரசு என்ற பெண்ணுடன் வீட்டுக்கு வருவார். நான் இருக்கும்போது ஒருமுறைதான் எதிரி வீட்டுக்கு வந்துள்ளார். நான் இல்லாதபோதும் எதிரி வீட்டிற்கு வந்து உள்ளார். போலிஸ் விசாரணையில் காலை 6 மணிக்கு எதிரி வீட்டுக்கு வந்து சென்று விட்டு மீண்டும் பகல் 12 மணியளவில் வந்ததாக நான் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். இந்த வழக்கில் எனது மருமகனை எதிரி அடித்தாரா என்றால் இல்லை. எனது மருமகன் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றால் 4 மணியளவில் வந்து எனது மகளை மருத்துவமனையில் சேர்த்துள்ளார். எனது மகள் மருத்துவமனையில் 28 நாட்கள் சிகிச்சை பெற்று வந்தார். எதிரியிடம் ரூபாய் 1,50,000 ரூபாய் கொடுத்தால் வழக்கை வாபஸ் பெறுவதாக கூறினோமா என்றால் அது போல் எதுவும் இல்லை. எனது மகளின் தங்கச் செயினை விற்று மருத்துவமனை சிகிச்சைக்கு செலவு செய்தோம். வழக்கு சொத்தான தங்கத்தாலி மற்றும் தாலி சரடை விற்றே மருத்துவமனை சிகிச்சைக்கு செலவு செய்தோம். எதிரியிடம் ரூபாய் 30,000 பணம் பெற்று அதை மறைக்கவே வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரிக்கு உணவு வழங்கியது குறித்து தெரிவித்துள்ளேன். எதிரியை நான் தான் போலிசாரிடம் பிடித்து கொடுத்தேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2019 ஆம் ஆண்டு மே திங்கள் 22-ம் நாள் சாட்சியாகிய சரளா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி இளநிலை உதவியாளர் திருமதி. சரஸ்வதி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சரளா | வயது 28 |
| த/பெ. (அ) க/பெ. | ஏழுமலை | இனம் |
| கிராமம் | குன்றத்தூர் | தொழில் இல்லத்தரசி |
| சமயம் | | தாலுக்கா |

C.C.276 /2017

<u>முதல் விசாரணை</u> 22.05.2019 அ.சா. 1 சரளா

நான் குன்றத்தூரில் வசிக்கிறேன். நான் இல்லத்தரசியா இருக்கறேன். ஏழுமலை எனது கணவர். விஜயா எனது அம்மா. கோமதி நான் குடியிருந்துவரும் வீட்டில் உரிமையாளர். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18/05/2017 ஆம் தேதி அன்று நான் என்னுடைய வீட்டில் இருந்து காலை 10 மணியளவில் எனது அம்மாவும் எனது கணவரும் வேலைக்கு கிளம்பி சென்று விட்டார்கள். அந்த சமயம் எதிரி வந்து பார்த்துள்ளார். எனது வீட்டில் ஆட்கள் இருந்ததால் அவர் சென்று விட்டார். மீண்டும் அன்றைய தினம் மதியம் 01.30 மணியளவில் வீட்டை பூட்டிக்கொண்டு வீட்டில் இருந்தேன். அந்த சமயம் எதிரி வீட்டின் கதவை தட்டினார். நான் கதவை திறந்தவுடன் அவர் வெயிலாக இருக்கிறது உட்கார்ந்து கொள்கிறேன் என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார். பின்ன் அக்கம் பக்கத்தில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்று என்னிடம் விசாரித்தார்கள். அனைத்தும் வாடகை வீடுகள் என்று சொன்னேன். அவர் சாப்பிட ஏதாவது இருக்குமா என்று கேட்டார் எதுவும் இல்லை. வீட்டில் காபி இருந்தது. காபி மட்டும் கொடுத்தேன். பிறகு என்னிடம் தண்ணீர் கேட்டதால் நான் பிரிட்ஜிலிருந்து தண்ணீர் எடுக்க சென்றபோது என் பின்னால் வந்து என்னுடைய ஷாலால் எனது கழுத்தை பின்னால் இருந்து கழுத்தை இறுக்கி என்னை கீழே தள்ளி அவர் கால்களால் என்னை இறுக்கப்பிடித்து கைகளால் எனது தலையை பிடித்து அவர் ஏற்கனவே எடுத்து வந்திருந்த பூச்சிக் கொல்லி மருந்தான HIT ஐ எனது மூக்கிலும் வாயிலும் என்னால் மூச்சு விட முடியாத அளவுக்கு மாறி மாறி அடித்தார். அதனால் நான் சுயநினைவை இழந்தேன். அதன் பிறகு மீண்டும் எனது கழுத்தில் சிக்கியிருந்த ஷாலால் இறுக்கியபோது எனக்கு சற்று நினைவு வந்து மீண்டும் நினைவு தப்பியது. அதன்பிறகு எப்போது எனக்கு நினைவு வந்தது என்று நேரம் சரியாக

தெரியவில்லை. நான் விழித்து பார்த்தபோது அவர் என்மேல் இருந்து என் தலைமுடியை பிடித்து எனது கண்ணத்தில் அறைந்து கொண்டிருந்தார். பிறகு நான் அவர் கையை கடித்து தப்பிக்க முயன்றேன். அவர் கைகளில் ரத்தம் ஆனதால் அவர் எனது அடுப்பங்கரைக்கு சென்று கைகளை கழுவிக் கொண்டு நான் கேள்வி கேட்க கேட்க வீட்டை விட்டு வெளியில் சென்று விட்டார். பிறகு நான் கீழ் வீட்டில் உள்ள வீட்டு உரிமையாளர் கோமதியிடம் நடந்ததை சொன்னேன். பிறகு அவர் என் கணவருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவர் வந்தவுடன் மாதா மருத்துவமனை சென்று என்னை என் கணவர் சிகிச்சைக்குசேர்த்தார். மேற்படி கோமதி கூறியதன்பேரிலேயே எனது கழுத்திலிருந்த தாலி சரடு காணவில்லை என்பதை கவனித்தேன். அதை எதிரி அறுத்துச் சென்றதை நான் உணர்ந்தேன். பிறகு காவல் துறையினர் மருத்துவமனை வந்த விசாரித்தார்கள். நான் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது. அது அதசா ஆ1. எனது தாயாரும் மருத்துவமனைக்கு வந்துவிட்டார். அவரிடம் நான் கூறியதன் பேரில் எனது தாயார் அடையாளம் கூற போலிசார் அன்றே பிடித்து விட்டனர். பிறகு எதிரியிடம் இருந்து என்னுடைய தாலி சரடு மற்றும் தாலி கைப்பற்றப்பட்ட அதை நான் நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டேன். அதை நான் தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். அது வழக்கு சொத்து Mo1. அதை நான் நீதிமன்றத்திலிருந்து மீண்டும் பெற்றுக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கொடுத்த புகாரில் யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதை படித்து பார்த்தேன் அது சரியாக இருந்தது. எதிரி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது தூரத்து உறவான அக்கா சரஸ்வதி மற்றும் அவரது தங்கை எதிரியை ஒரு முறை வீட்டிற்கு அழைத்து வந்ததன் அடிப்படையில் அவரை பார்த்துள்ளேன். அந்த அக்காவுக்கும் எனக்கும் நடுவில் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் வேலையை செய்கிறாரா என்றால் தெரியாது. என் கணவர் ஓட்டுநர் வேலை செய்கிறார். எனது கணவர் ஊருக்குள்ளேயேதான் வண்டி ஓட்டுவது வழக்கம். வெளியூர்களுக்கு வழக்கமாக வண்டி ஓட்டமாட்டார். எதிரி ரவி எனது வீட்டுக்கு 3 அல்லது 4 முறை வந்துள்ளார். எதிரியிடம் நாங்கள் கடன் வாங்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல. எனது புகாரின் படி ஒரு மணி நேரம் மதியம் 02.15 மணி முதல் 03.15 மணிவரை எதிரி என் வீட்டினுள் இருந்தார் என்றால் ஆமாம். அவருடன் பேசிக்கொண்டிருந்தேன் வாசலில் அமர்ந்து கொண்டு. நான் குடியிருக்கும் வீடு முதல் தளமா அல்லது தரை தளமா என்றால் 2 வது தளமாகும். 2 வது மாடியில் வாசல் இருக்கிறதா என்றால் படிக்கட்டு அருகே அமர்ந்து கொண்டு பேசிக்கொண்டு இருந்தோம்.

அவ்வாறெனும் நாங்கள் இருவரும் வரவேற்பறையில் அமர்ந்து பேசவில்லை என்றால் சரிதான். வாசலிலேயே என்னை HIT அடித்து செயினை அறுத்து சென்றாரா என்றால் HIT அடிக்கும் போது நான் ஹாலில் இருந்தேன். நினைவு தெரிந்தபோது நான் படுக்கை அறையில் இருந்தேன். எதிரியிடம் நான் 30,000 ரூபாய் பணம் பெற்றுள்ளேன் என்றும் அதை வாங்குவதற்கே அன்றைய தினம் அவர் வந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 30,000 ரூபாய் எதிரியிடம் கடன் பெற்றுள்ளேன் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய 30,000 ரூபாய் கடனை மறைப்பதற்காக பொய்யாக வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கை திரும்ப பெற வேண்டுமெனில் ரூபாய் 1,00, 000/- பணம் எதிரியிடம் நஷ்ட ஈடாக கேட்டேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று நான் காவல் நிலையம் செல்லவில்லை. நான் மருத்துவமனையிலேயே புகாரை கொடுத்தேன். மாலை 4 மணியளவில் புகார் கொடுத்தேன். போலிசார் அன்றைய தினமே விசாரணை செய்தார்கள். சம்பவ தினத்தன்று நான் எனது கணவருக்கும் அம்மாவிற்கும் தொலைபேசிமூலம் தகவல் தெரிவித்துவிட்டு பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக போலிசார் எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். HIT அடித்ததால் மனித உயிருக்கு பாதிப்பு இல்லை என்றால் அது சரியல்ல. எனது புகாரில் எனது தங்கச் சரடை அறுத்து கொண்டு சென்றுள்ளதாக கூறியிருக்கிறேன் என்றும் எனினும் வழக்கு சொத்து அறுபட நிலையில் இல்லை என்றால் எதிரி அறுக்கவில்லை. கழட்டி சென்று இருக்கிறார். இது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் எதிரியிடம் வாங்கிய 30,000 ரூபாய் கடனை ஏமாற்றும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.